Crl.Misc.39
DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM
JUDICIAL MAGISTRATE COURT, ANNUR.
Case No. C.C.No. 95 /2025

Deposition of witness for Prosecution – P.W.2 Date : 06.03.2026

| | | | |
|---|---|---|---|
| Name : | கருப்புசாமி | Village : | அன்னூர் |
| Father's Name : | முத்துச்சாமி | Taluk : | அன்னூர் |
| Age : | 54 | District : | கோவை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 06th day of March 2026 **(Accused present)**

**சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது அன்னூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கில் காவல் நிலைய வழக்கு கோப்பு ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான திரு. செல்வன் மற்றும் இரண்டு காவலர்கள் கடந்த 16.04.2025ம் தேதி மாலை 16.00 மணியளவில் ரோந்து பணியில் ஈடுப்பட்டிருந்தபோது ஆய்வாளருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் செல்லப்பன்பாளையம் – உதையன் தோட்டம் அருகே சட்ட அனுமதியின்றி தென்னங்கள் விற்பனை செய்வதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் ஆய்வாளரும் இரு காவலர்களும் சம்பவ இடம் சென்றுள்ளனர். அங்கு ஆஜர் எதிரி சுமார் 25 லிட்டர் அளவுள்ள மண்பானையில் சுமார் 20 லிட்டர் தென்னங்கள்ளை அனுமதியின்றி விற்பனைக்காக வைத்திருந்தது தெரியவந்துள்ளது. அதனால் சம்பவ இடத்திலேயே காவல் ஆய்வளார் அவர்கள் எதிரியை கைது செய்து பொதுமக்கள் சாட்சிகள் யாரும் இல்லை என்பதால் காவலர்கள் நாகராஜ் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் வழக்கு சொத்துக்களை கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர் அன்றைய தினமே மாலை 4.30 மணியளவில் மேற்கண்ட சாட்சிகள் முன்னிலையில் வழக்கு சொத்துக்களை அழித்தல் மகஜர் மூலம் அழித்துள்ளார். அதன் பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, பின் தக்க இரு நபர் நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் வழக்கின் விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக 4(1)(C) TNP Act ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார். (**அந்த கைப்பற்றுதல் மகஜர், அழித்தல் மகஜர், முதல் தகவல் அறிக்கை, ஆகியவை முறையே அ.சா.ஆ. 3 முதல் 5 வரையாக குறியீடு செய்யப்படுகிறது**.)

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

இவ்வழக்கின் தகவலாளி, புலன் விசாரணை அதிகாரி மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நபர் ஆகிய மூன்றுமே காவல் ஆய்வாளர் செல்வன் என்றால் சரிதான். அ.சா.1 தன்னுடைய வாக்குமூலத்தில் வழக்கு சம்பவ இடத்திற்கு மதியம் 2.00 மணிக்கு சென்றதாக குறிப்பிட்டுள்ளாரா என்றால் 16.00 மணிக்கு குறிப்பிட்டுள்ளார். எதிரிக்கு சொந்தமான தோட்டத்தில் இருந்து வழக்கு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக வாக்குமூலத்தில் கண்டுள்ளதா என்றால் இல்லை. இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவை தயார் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்று சொன்னால் சரிதான். காவல் நிலைய புள்ளி விபர கணக்கிற்காக எதிரி மீது தவறாக முதல் தகவல்

அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் தவறு. எதிரியிடம் இருந்து வழக்கு சொத்துக்கள் எதுவும் கைப்பற்றபடவில்லை என்று சொன்னால் தவறு. இவ்வழக்கில் தனி நபர் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் தொடர்பில்லை என்று சொன்னால் தவறு. இவ்வழக்கின் கைப்பற்றுதல் மகஜரில் குற்ற எண் குறிப்பிட்டு தான் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் தொடர்பாக புகைப்படங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct.

S/d.V.Monika
District Munsif Cum Judicial Magistrate
Annur